# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 79/பேரூ/2023**
**நாள் : 19 .05.2023**

திரு. M.ஆறுமுகம்,
வாணிப்புத்தூர்,
ஈரோடு மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வாணிப்புத்தூர்பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம் ... எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வாணிப்புத்தூர், சக்தி – அத்தாணி மெயின் ரோடு கதவு எண்.17/7 ஆர்த்தி உணவகம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M.ஆறுமுகம் என்பவரது 27.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.03.2023 அன்று பெறப்பட்டு 79/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வாணிப்புத்தூர், சக்தி - அத்தாணி மெயின் ரோடு, கதவு எண்.17/7, ஆர்த்தி உணவகம், என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M.ஆறுமுகம் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஆர்த்தி உணவகம் என்ற பெயரில் வாடகைக் கடையில் உணவகம் நடத்தி வருகின்றேன். கடந்த 14.3.2023 தேதியில் வாணிப்புத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் கடை உரிமம் பெற விண்ணப்பம் கொடுத்தேன். மேற்படி விண்ணப்பத்தில் மாத வருமானம் ரூ.12,000 முதல் ரூ. 15,000 வரை உள்ளது என்று குறிப்பிட்டிருந்தேன். 18.3.2023 அன்று பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து வரி வசூல் செய்யும் திரு. நல்லதம்பி என்பவர் எனது கைபேசியில் தொடர்புகொண்டு உரிம கட்டணம் ரூ.200/– தொழில்வரி ரூ.1540/– மற்றும் கையூட்டு ரூ,1000/– கொடுக்க சம்மதம் என்றால் திங்கள்கிழமை இரசீது போட்டுக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார். இதற்கான ஆதாரம் எனது கைபேசியில் பதிவு செய்துள்ளேன். எனது கடைக்கு அருகாமையில் உள்ள உறார்டுவேர்ஸ் கடை, டீ கடை, மளிகைக்கடை, சலூன்கடை, கார்மெண்ட்ஸ் போன்ற அனைத்து கடைகளுக்கும் தொழில்வரி ரூ.300 முதல் 350 வரை தான் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் எனது கடை போன்று அருகில் உள்ள உணவகங்களுக்கும் ரூ.300/– முதல் 350/– வரைதான் தொழில் வரி விதித்துள்ளனர். எனது உணவகத்தில் நான் மற்றும் எனது மனைவி இருவர் மட்டுமே மெஸ் நடத்தி வருகின்றோம். சம்பள ஆள் கிடையாது. எனக்கு மட்டும் வரி ரூ. 1740 + லஞ்சம் 1000 = ரூ.2740 என்று வரி விதித்துள்ள வாணிப்புத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.04.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. M.ஆறுமுகம் என்பவர் சமர்ப்பித்த புகார் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு கீழ்க்கண்ட விபரங்களின்படி புகார்தாரர் திரு. எம். ஆறுமுகம் என்பவரிடம் நேரடியான தகவலின் மூலமும் மற்றும் புகாருக்கு உள்ளாக்கப்பட்ட பேரூராட்சி அலுவலக வரிவசூலர் திரு.ப. நல்லதம்பி என்பவரிடம் 19.4.2023 அன்று காலை 11.00 மணியளவில் நேரடியாக ஆஜராகுமாறு குறிப்பாணை அனுப்பப்பட்டு இருவரிடமும் விசாரணை செய்யப்பட்டது.

பேரூராட்சி வரிவசூலர் திரு. ப. நல்லதம்பி தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தில், மனுதாரரின் விணணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வருமானத்தின் அடிப்படையில் அரையாண்டு வரியாக ரூ.770/– வீதம் வருடம் ஒன்றுக்கு ரூ.1540/– மற்றும் கடை உரிமக் கட்டணம் ரூ.200/– படைவீரர் கொடிநாள் நிதி – 2022க்கு தொகை ரூ.1000/– என மொத்தம் ரூ.2740/– செலுத்துமாறு கூறியதாகவும், அதை மனுதாரர் தவறுதலாக புரிந்து கொண்டு கையூட்டு கேட்டதாகவும் அதன் அடிப்படையில் புகார் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார். அதன் உண்மைத் தன்மை குறித்து அறிய புகார்தாரரிடம் நேரடி விசாரணை செய்யப்பட்டதற்கும், வரிவசூலர் திரு. ப. நல்லதம்பி என்பவரின் வாக்கு மூலம் குறித்து தெரிவித்ததற்கும் புகார்தாரால் கீழ்க்கண்ட விபரப்படி எழுத்து மூலம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

"புகார்தாரர் தனது 19.04.2023ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி கடையின் மாத வருமானம் ரூ.12000/– முதல் ரூ.15000/– வரை என தவறுதலாக 13.03.2023ம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் தனது மாத வருமானம் உண்மையிலேயே ரூ.4500/– மட்டுமே ஆகும் என்றும், இதுதான் உண்மை என்றும் எனவே அதன் அடிப்படையிலேயே தனக்கு கடை உரிமம் மற்றும் தொழில்வரித் தொகையினை நிர்ணயம் செய்து இரசீது வழங்குமாறு கோரியுள்ளார். மேலும், 19.04.2023ம் தேதிய புகார்தாரரின் மற்றொரு கடிதத்தில் மேற்படி கடை உரிமக்கட்டணம் ரூ.200/–ஐ செ.சீ. எண். 13/2023–2024 நாள் 19.04.2023ல் செலுத்திவிட்டதாகவும், தொழில்வரி தொகை ரூ.330/– செ.சீ.எண்.14/2023–2024ன்படி 19.4.2023–ல் செலுத்திவிட்டதாகவும் மேற்படி தொகையினை தவிர வேறு எவ்விதமான தொகைகளையோ அதாவது கையூட்டு கேட்டதாக கூறப்பட்ட தொகை ஆகிய எவையும் யாருக்கும் தான் கொடுக்கவில்லை என்றும், ஏற்கனவே தன்னால் கொடுக்கப்பட்ட புகார் மனுவினை தான் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும், தன்னால் புகார் அளிக்கப்பட்ட திரு. ப. நல்லதம்பி, வரிவசூலர் மீது

எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மன்னிப்பு வழங்குமாறும் கூறி எழுத்து மூலமாக கடிதம் அளித்துள்ளார்.

புகார்தாரரால் 19.04.2023ல் தெரிவித்துள்ள மாத வருமானம் ரூ.4500/– அடிப்படையில் 6 மாதத்திற்கு வருமானம் ரூ.27000/– (6x4500)க்கு அரையாண்டு வரியாக ரூ.165/– வீதம் வருடம் ஒன்றுக்கு ரூ.330/– வீதம் கணக்கிடப்பட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு அவரது சம்மதத்தின் பேரிலேயே தொழில்வரி வசூலிக்கப்பட்டது. மேலும், மேற்படி இருவரது வாக்கு மூலங்கள், விசாரணை அறிக்கைள் தாக்கல் செய்த ஆவணங்கள் ஆகியவைகளை நன்கு ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டதில், இப்பேரூராட்சி வரிவசூலர் திரு.ப. நல்லதம்பி என்பவர் மீது கூறப்பட்ட விபரங்கள் அனைத்தும் புகார்தாரரால் தவறுதலாக புரிந்து கொண்டு தெரிவிக்கப்பட்டதாகவும் விசாரணையில் அறியப்பட்டது.

எனவே, இது குறித்து இருவரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள், புகார் மனு, தொழில்வரி விதிப்பதற்கான இப்பேரூராட்சியின் தொழில்வரி சீராய்வு குறித்த அறிவிப்பு ந.க.எண். 275/2018 நாள் 25.09.2018ன் நகல் ஆகியவற்றினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அமைப்பின் மேலான கவனத்திற்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 08.05.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் திரு.ஆறுமுகம் என்பவர் இம்முறை நடுவத்தில் நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

5) வாணிப்புத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் 08.05.2023 அன்று இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்

"மனுதாரர் நடத்திவரும் உணவகத்தின் மூலம் கிடைக்கும் மாதவருமானத்தை கணக்கில்கொண்டு அவருக்கு அரையாண்டு வரியாக ரூபாய் 165/– வீதம் வருடத்திற்கு ரூபாய் 330/– தொழில் வரியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்திருந்த பேரூராட்சி வரிவசூலர் திரு. ப. நல்லதம்பி என்பவர் வரிவசூல் குறித்து தெரிவித்த விவரங்களை மனுதாரர் தவறாக புரிந்துகொண்டுள்ளார் என்பதை மனுதாரரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தெரிய வந்தது. எனினும் மனுதாரரின் புகாரையொட்டி, பேரூராட்சியின் வரி வசூலர் எச்சரிக்கப்பட்டுள்ளார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 05.05.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஈரோடு மாவட்டம், வாணிப்புத்தூரைச் சேர்ந்த மனுதாரர் திரு. M.ஆறுமுகம் என்பவர் தனது 27.3.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வாணிப்புத்தூர் பேரூராட்சிக்குப்பட்ட கோபிச்செட்டி பாளையத்தில் வாடகை முறையில் நடத்தி வரும் ஆர்த்தி உணவகத்திற்கு கடை உரிமை பெற வாணிப்புத்தூர் பேரூராட்சியில் 14.3.2023 அன்று விண்ணப்பம் செய்ததில், பேரூராட்சியின் வரிவசூலர் திரு. நல்லதம்பி என்பவர் கைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது கடையின் மாத வருமானம் ரூ.12,000/– முதல் 15,000/– என மனுதாரர் தெரிவித்ததை தொடர்ந்து வரிவசூலர் உரிமக்கட்டணம் ரூ.200/– தொழில் வரி ரூ.1,540/– மற்றும் கையூட்டாக ரூ.1,000/– என ஆகமொத்தம் ரூ.2,740/– செலுத்தினால் உடனடியாக கடைஉரிமம் வழங்கப்படும் என தெரிவித்ததாக மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் பக்கத்து உணவகங்களுக்கு ரூ.300/– முதல் ரூ.350/– வரை தான் தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது எனவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரிவசூலர் கைபேசியில் பேசிய உரையாடல்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் 19.4.2023 அன்று மனுதாரரால் புகார் சுமத்தப்பட்ட பேரூராட்சி வரிவசூலர் திரு. நல்லதம்பி என்பவரிடம் நேரடி விசாரணை செய்துள்ளதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் மனுதாரான திரு. M.ஆறுமுகம் என்பவர் வரிவசூலர் திரு. நல்லதம்பி மீது குற்றம்சாட்டி முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்து, வழக்கானது இம்முறைமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரான திரு. M.ஆறுமுகம் என்பவரிடம் அவர் அளித்த புகார் குறித்து நேரடி விசாரணை மேற்கொண்ட செயலானது 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தினை செயல் அலுவலர் தன் கையில் எடுத்து சட்ட வரம்புமீறி செயல்பட்டுள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது. இத்தகைய செயலானது அரசால் அமைக்கப்பட்ட இம்முறைமன்ற நடுவத்திற்கே களங்கம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது. தவிர, செயல் அலுவலர் முறைகேடாக, அத்துமீறி, சட்டவிதிகளுக்கு முரணாக வரம்பு மீறி செயல்பட்டுள்ளார் என இம்முறை மன்ற நடுவம் கருதுகிறது.

மேலும் மனுதாரரின் புகார் மனு தொடர்பான வழக்கு இம்முறைமன்றத்தில் நிலுவையில் இருக்கும் சமயத்திலேயே, மனுதாரரிடம் தொழில்வரி நிர்ணயம் செய்வது தொடர்பாக மற்றொரு விண்ணப்பத்தினை பெற்று குறைந்த தொழில் வரியினை நிர்ணயித்துள்ளதும் செயல் அலுவலரின் விசாரணையில் கொடி நாள் நிதி என்பதை மனுதாரர் கையூட்டு என தவறாக புரிந்து கொண்டதாக தெரிவிப்பதன் மூலம் மனுதாரர் திரு. M.ஆறுமுகம் என்பவரை செயல் அலுவலரின் விசாரணை என்கிற நடவடிக்கையின் மூலம் பிறழ் சாட்சியாக மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது தெளிவாகிறது.

இதன் விளைவாகவே மனுதாரர் தனது புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்பட்ட நேரடி விராணையிலும் ஆஜராகவில்லை என தெரியவருகிறது.

பேரூராட்சி வரிவசூலர் முதலில் கைபேசி மூலம் மனுதாரரை தொடர்பு கொண்டு தொழில் வரி ரூ.1540/– என நிர்ணயம் செய்துள்ளதையும், மனுதாரர் குறைவான மாத வருமானம் என தெரிவித்ததும், மிகக் குறைந்தளவு தொழில் வரியாக ரூ.330/– என குறைத்து நிர்ணயத்துள்ளதன் மூலம், வரிவசூலர், கடையின் உரிமையாளரையோ மற்றும் நேரடி கள ஆய்வோ செய்யாமல் தன்னிச்சையாக தொழில் வரியினை நிர்ணயம் செய்துள்ளது அவரது பொறுப்பற்ற கடமை தவறிய மற்றும் உள்நோக்கத்துடன் விதிகள் மீறி நடந்து கொண்டுள்ளார் என்பதும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

இவ்வாறு பொறுப்பற்ற முறையில் விதிகள் மீறி செயல்பட்டுள்ள வாணிப்புத்தூர் பேரூராட்சி வரிவசூலர் மற்றும் செயல் அலுவலர் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, மே 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.ஆறுமுகம்,
கதவு எண்.17/7, ஆர்த்தி உணவகம்,
சக்தி - அத்தாணி மெயின் ரோடு, வாணிப்புத்தூர்,
கோபிசெட்டிபாளையம் வட்டம், ஈரோடு மாவட்டம்

2) செயல் அலுவலர்,
வாணிப்புத்தூர்பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.